அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 88/2008

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 06–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 06.03.2026 |
| பெயர் சத்தியகுமார் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை</u>:–

1. நான் இந்த வழக்கில் எந்த பரிகாரம கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய இடத்தில் பிரதிவாதி அத்துமீறி நுழைவதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து கிராமநத்தம் அய்யப்பாக்கம் சாலையில் உள்ளது. வழக்கு சர்வே எண்.289/1A1 ஆகும். தாவா சொத்தின் விஸ்திரணம் 3496 சதுரஅடி ஆகும். தாவா சொத்து இளங்கோ என்பவரிடம் இருந்து 2006 வருடத்தில் கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெற்றதற்கான மூலபத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

2. எனக்கு கிரையம் கொடுத்தவருக்கு பாகபிரிவினை மூலம் கிடைத்த சொத்தை எனக்கு கிரையம் கொடுத்தார். நான் கிரையம் பெறுவதற்கு

முன்பு வில்லங்கம் சரிபார்த்து பெற்றேனா என்றால் ஆமாம். வழக்கறிஞர் legal opinion பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் legal opinion பெற்றேன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வில்லை. நான் எனக்கு கிரையம் கொடுத்தவர் பெயரில் உள்ள பட்டா, சிட்டா , அடங்கல் முதலிய வருவாய் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கிரையம் பெற்றபிறகு சர்வேயர் வைத்து சொத்தை அளந்துபார்த்தேனா என்றால் கிரையம் பெறுவதற்கு முன்பு அளந்துபார்த்தேன்.

3. நான் சர்வேயருக்கு செலுத்திய கட்டணம் முதலிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் கிரையம் பெற்ற 2006 க்கு பிறகு உடனே பட்டா மனுகொடுத்தேனா என்றால் இல்லை. தற்போது தாவா சொத்தில் யார்வசித்துவருகிறார் என்றால் நான்தான் உள்ளேன். தாவா சொத்தில் என்ன உள்ளது என்றால் ஒருசெட் போட்டுள்ளேன். எனது பிராது மற்றும் நிருவணவாக்குமூலத்தில் மேற்கூறிய செட்பற்றி சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் பிரமாணவாக்குமூலத்தை படித்துபார்த்து தான் கையொப்பம் செய்தேன். எனது பிரமாணவாக்குமூலத்தில் செட்பற்றிய விவரம் இல்லை என்றால் எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது.

4. நான் பிரமாணவாக்குமூலத்தில் படித்துபார்த்து கையொப்பம் செய்ததாக சொல்லி உள்ளது தவறு என்றால் ஆமாம். எனது வழக்கறிஞர் எனக்கு படித்துக்காட்டினார். தாவா சொத்தில் செட்உள்ளது என்பதை காட்டும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனாஎன்றால் ஞாபகம்இல்லை. நான் தாவா சொத்தில் வசிக்கவில்லை என்றாலும் இன்றைய தினம் வரை பிரதிவாதிகள் தான் வசித்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் எனக்கு எதிராக வழக்கு எதுவும் உள்ளதா

என்றால் எனக்கு தெரியாது. அ.வ.எண் 132/2020 வழக்கு எனக்கு எதிராக தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அ.வ.எண்214/2000 வழக்கில் எனக்கு கிரையம் கொடுத்த இளங்கோவன் என்பவருக்கு எதிராக தீர்ப்பாகியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

(பிரதி வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)